6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) உறுப்பினர்களுக்கு மதிய உணவு வழங்கல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மகாலிங்கம் கொஞ்சம் இருங்கள். இன்று உறுப்பினர்களுக்கு மதிய உணவு பிற்பகல் 1½ மணிக்கு வழங்க சட்டமன்றப் பேரவைச் செயலகம் ஏற்பாடு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

8. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்
(ஆ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம்
(இ) கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்
(ஈ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்
(உ) கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்
(ஊ) கோரிக்கை எண் 42—பல்வகை
(எ) கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு
(ஏ) கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மகாலிங்கம், பேசுங்கள்.

திரு. எஸ். மகாலிங்கம்: மேலும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பத்திரிகை நிருபர்களுக்கும், தொலைக்காட்சி நிருபர்களுக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது வெற்றிக்காக என்னோடு தோளோடுதோள் நின்று உழைத்த கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும் முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று மாபெரும் வெற்றியைக் கண்ட மகத்தான தமிழகத் தாய் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு முதற்கண் எனது கோடானுகோடி நன்றியை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதத்தை நோக்கி நான் காணிக்கை ஆக்கிக்கொள்கிறேன். மேலும் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே மீண்டும் கழக ஆட்சியை அமைத்து தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள